# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 11.05.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள பைஅத் நிபந்தனைகளின் 10வது நிபந்தனையில் தம்முடன் கொள்ள வேண்டிய அன்பு மிக உயரியதாக இருக்க வேண்டும் என்பதை கட்டாயமாக்கியுள்ளார்கள். அதுவும் உலகின் எந்த முன்மாதிரியும் அதற்கு இல்லாத அளவில் அந்த அன்பு இருக்க வேண்டும். அன்னாரது பைஅத்தின் கீழ் வந்த பிறகு இது அவ்வளவு அவசியம் ஏன்? காரணம் அவர்களே இக்காலத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பர் ஆவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய முன்னறிவிப்பிற்கேற்ப ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து பூமிக்கு எடுத்து வந்தார்கள். இஸ்லாமிய போதனைகளுக்குள் புகுந்த பித்அத்துகளை அகற்றி இஸ்லாத்தின் போதனைகள் மீது இருந்த மாசுகளை அகற்றி பொலிவுமிக்க போதனையை நம்முன் வைத்தார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மையான போதனையின் உயரிய ஸ்தானத்தை நமக்கு அறிமுகப்படுத்தினார்கள். அடியார்களை இறைவனுடன் இணைத்தார்கள்.

**அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

நான் எனது உண்மையான, முழுமையான அறிவுடன் அறிவேன். இந்த நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் எந்த மனிதரும் இறைவனை அடைய முடியாது. முழுமையான இறை ஞானத்திலிருந்து பங்கு பெறவும் முடியாது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி அந்த பேரன்பில் தம்மை மாய்த்து விட்டதனால் அதுவே அன்னார் இறைவன் வரை சென்றடைய காரணமாயிற்று. பிறகு இறைவன் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய இந்த உண்மை பேரன்பரை தன்னை வந்தடையும் ஊடகத்துள் ஒன்றாக்கி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் தொடர்பு வைப்பதையும், அன்னார் மீது அன்பான தொடர்பு வைப்பதையும் அவசியம் ஆக்கினான். பின்னவர்களை முன்னவருடன் இணைக்கத்தக்க முஹப்பத்தை இறைவன் அவர்களுக்கு காட்டினான். அல்லாஹ்வின் இந்த நடைமுறையைப் பற்றி அன்னார் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்.

மனிதன் உண்மையான உள்ளத்துடன் இறைவன் மீது அன்பு காட்டும் போது இறைவனும் அவர் மீது அன்பு காட்டுகின்றான். உலகில் அவருக்காக கபூலிய்யத் (ஒப்புக் கொள்ளும் பண்பு) பரப்பப்படுகிறது. ஆயிரக்கணக்கான மனிதர்களின் உள்ளத்தில் அவர்கள் மீது உண்மையான அன்பு போடப்படுகிறது. ஓர் ஈர்ப்பு சக்தி வழங்கப்படுகிறது. ஓர் ஒளி அவருக்கு வழங்கப்படுகிறது. அது எப்போதும் அவருடன் இருக்கும். இந்த அந்தஸ்து இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு கிடைத்தது. இப்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடன் உண்மையான அன்பு வைத்தவர்கள் மற்றும் உண்மையான அன்பு தொடர்பு வைத்தவர்களின் சில சம்பவங்களை எடுத்து வைப்பேன்.

ஹஸ்ரத் அல்லாஹ் யார் சாஹிப் அறிவிக்கின்றார்கள்: ஹுஸூர் (அலை) அவர்களை நான் எப்போதுமே பலமுறை சந்தித்து வந்துள்ளேன். ஹஸ்ரத் (அலை) அவர்களின் கைகளைப் பிடித்து விடுவதில் எனக்கு மிகவும் ஆர்வம் இருந்தது. ஹுஸூருடைய தூய வார்த்தைகளையும் இல்ஹாம்களையும் கேட்டு வந்தேன். அதாவது சபைகளில் அமர்ந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுக்கு வந்த இல்ஹாம்கள் பற்றி கேட்டுக் கொண்டிருப்பார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறும்

விஷயங்களை நான் கேட்டு வந்தேன். கூறுகிறார்: இதே ஆர்வத்தில் நான் காதியானுக்கு ஹிஜ்ரத் செய்தேன். அதாவது இந்த விஷயங்களை தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதற்காக வந்தேன். இங்கு வந்து

தச்சு வேலையை தொடங்கினேன். என்னிடம் போதுமான பணம் இருந்தது. அவை அனைத்தும் செலவாகி விட்டது. பிறகு என்னிடம் சிறிதும் பணம் இல்லாமல் போய்விட்டது. பிறகு ஒருநாள் நான் அல்வா தயாரித்து விற்கத் தொடங்கினேன். ஹுஸுருடைய பைத்துத் துஆவிற்கு கீழ் அமர்ந்து புத்தம் புதிய அல்வா என்று கூவினேன். எனது குரலை உம்முல் மூஃமினீன் அவர்கள் கேட்டு விட்டார்கள். அவர்கள் என்னை அறிந்திருந்தார்கள். அவர்கள் குத்தகைக்காரர் என்ன வேலை தொடங்கியுள்ளார் எனக் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், விட்டில் பூச்சிகள் விளக்கின் ஒளியின் மீது விழுந்து விடுகின்றன. அவர் என்ன செய்வார்? இவர் இந்த வேலைக்காகத் தான் வந்தார். அதற்காக சிறிது பொருளீட்டவும் வேண்டுமல்லவா? என்று கூறினார்கள். உம்முல் மூஃமினீன், அவர் ஒரு குத்தகைக்காரர்; பொதுவாக குத்தகைக்காரர்களிடம் அந்தக் காலத்தில் கழுதைகள் இருக்கும். அவற்றில் குத்தகைக்காரர்கள் பொருட்களை ஏற்றி ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு விற்பனைக்காக அனுப்பி சம்பாதிப்பர். அதனை எடுத்துக் கொண்டு இவர் ஏன் அவ்வாறு செய்வதில்லை? என்று கூறினார்கள்.

அதற்கு மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இவரிடம் கழுதைகள் கிடையாது என்று கூறினார்கள். அம்மா ஜான், அவர் ஏதாவது ஒருவரிடம் வேலைக்குப் போயிருக்கலாமே? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், இவர் தச்சு வேலை தெரிந்தவர்; அந்த வேலை மட்டும் தான் செய்ய முடியும். அதில் இறைவன் அவருக்கு பரக்கத் தரட்டும்! என்று கூறினார்கள்.

இவர் கூறுகிறார்: இந்த உரையாடலையும் நான் கேட்டுக் கொண்டிருந்தேன். பிறகு ஹுஸுர் (அலை) அவர்கள் எனனை அழைத்து, உங்களிடம் ஏதாவது மரக்கட்டைகள் உள்ளதா? என்று கேட்டார்கள. நான் அதற்கு பேரி, பிபிள் ஆகிய மரக்கட்டைகள் உள்ளன என்றேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள், விருந்தினர் இல்லத்திற்காக கட்டில் கால்கள் தேவை. நீங்கள் அந்தக் கால்களைச் செய்து தருவீர்களா என்று கேட்டார்கள். அப்போது ஒருவர், பீப்பல் மரக்கட்டைகள் நீண்ட நாட்கள் உழைக்காது என்றார். ஹுஸுர் (அலை) அவர்கள், யாருக்காக நாம் செய்யச் சொல்கின்றோமோ அவனே பீபிள் மரத்தை படைத்தவனாவான். அவன் அதை வீணாகப் படைக்கவில்லை. என்னிடம் இருபது ஜோடிகளை தயார் செய்யுமாறு கூறினார்கள். அதாவது பணியாளர் 'அதைச் செய்ய வேண்டாம்' என்று கூறியதை வைத்து 'வேண்டாம்' என்று கூறாமல் 'செய்யுங்கள்' என்றார்கள். அதாவது இரு தரப்பிலும் இந்த அன்பின் தொடர்பு இருந்தது.

**பிறகு, ஹஸ்ரத் மலிக் கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் 1902-ல் ஹஸ்ரத் ஸாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் மர்ஹூம் (ரலி) அவர்களுடன் காதியான் தாருல் அமானுக்கு வந்தேன். நான் வந்த நாளிலேயே பைஅத் செய்தேனா மறுநாளா என்று நினைவில்லை. ஆம். ளுஹர் தொழுகைக்குப் பிறகு நாங்கள் பைஅத் செய்வதற்காக ஆஜரானோம் என்பது மட்டும் நினைவில் உள்ளது. ஹஸ்ரத் ஷஹீத் மர்ஹூம் (ரலி) அவர்கள் முதலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் தமது கையை வைத்தார்கள். இரண்டாவதாக, நான் கையில் கை வைத்தேன். பைஅத் செய்த பிறகு இந்த எளியவன் 2-3 நாட்கள் காதியான் தாருல் அமானில் கழித்திருப்பேன். ஷஹீத் மர்ஹூம் என்னிடம் கூறினார்கள். நான் கனவு கண்டேன். உங்களுக்கு கோஸ்ட் பகுதியின் தலைவர்கள் தொல்லைகள் கொடுப்பர். எனவே உடனே திரும்பி விடுங்கள். நானும் இரண்டு மூன்று நாட்களுக்குப் பிறகு உடனே திரும்பி விட்டேன். என்னுடன் ஒரு முல்லா ஸ்பியின்குல் சாஹிபும் ஊர் திரும்பினார். ஷஹீத் மர்ஹூம் எப்போதும் கூறி வந்தார்கள். இந்த சம்பவத்தில் ஷஹீத் மர்ஹூம் என்பவர் ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிப் அவர்களாவார்கள். அவர்களது பேரன்பு குறித்து இங்கு கூறப்படுகிறது.

கூறுகிறார்: என்னை விட பெரிய ஆலிமை நான் பார்த்ததில்லை. இது அல்லாஹ்வின் அருள் மட்டுமே ஆகும் என்ற ஷஹீத் மர்ஹூம் கூறுவார்கள். அவ்வாறு ஒருவர் இருந்தால் அவரது கால்களை நான் முத்தமிடுவேன். இந்த வகையில் இங்கு வந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்தார். கூறுகிறார்: நான் என் கண்களால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பாதங்களை ஷஹீது மர்ஹூம் முத்தமிடுவதைக் கண்டேன். அவர்கள் என்ன கூறினார்களோ அதனை உண்மைப்படுத்தினார்கள்.

**ஹஸ்ரத் மவ்லவி சிக்கந்தர் சாஹிப் அறிவிக்கின்றார்:**

ஒருநாள் காதியான் வந்து தங்கும் முன் இந்த அடியான் இங்கு வந்திருந்தேன். காலையில் நடப்பதற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் சென்றார்கள். இந்த அடியானும் கூடச் சென்றேன். இவர் பிறகு நிரந்தரமாக காதியானில் வந்து தங்கி விட்டார். அதற்கு முன் நடந்த சம்பவமாகும். கூறுகிறார்: பேனி பாங்கா அருகில் பஸ்ராமாத் வழியில் போய் கொண்டிருந்த போது வழியில் அன்னர் கூறினார்கள். எவர் சிறு சிறு விஷயங்களை விட முடியவில்லையோ அதனை விட்டு விடுவதால் யாருக்கும் கோபம் ஏற்படுவதில்லையோ உதாரணமாக, ஹுக்கா, பங்கி, அஃப்யூன் போன்றவைகளை விட்டு விடுவதில்லையோ அவரால் பெரிய விஷயங்களை எவ்வாறு விட முடியும்? பெறறோர், சகோதரர்கள், நண்பர்கள் கோபப்படும் அளவுக்கு மார்க்கத்தின் மாற்றத்தை எவ்வாறு எதிர்கொள்வார்? அதாவது அஹ்மதிய்யத்தை ஏற்றுக் கொள்வதால் வரும் சிரமத்தை எவ்வாறு சகித்துக் கொள்வார்? அதற்காக பெரும் சிரமம் மேற்கொள்ள வேணடியது வரும். சிறிய சிரமத்தையே சகித்துக் கொள்ள முடியாவிட்டால் பெரும் கஷ்டத்தை எவ்வாறு சகித்துக் கொள்ள முடியும்.

கூறுகிறார்: இந்த அடியான் அதுவரை ஹுக்கா குடித்து வந்தேன். இதனைக் கேட்ட உடனேயே இனி ஹுக்கா பிடிக்கமாட்டேன் என்று சத்தியம் செய்தேன். இவ்வாறு ஹுக்கா பிடிக்கும் பழக்கத்தை விட்டு விட்டேன். முதலில் அதிகமாக ஹுக்கா பிடித்தவன் பிறகு அதனை தீண்டவேயில்லை. அதாவது அன்னாரது தொடர்பு அவர்களை இவ்வாறு செய்ய வலியுறுத்தியது. அந்த தீமையிலிருந்து முற்றிலும் விலகி விட்டார்கள்.

**ஹஸ்ரத் ஷுகுர் இலாஹி சாஹிப் அஹ்மதி அறிவிக்கின்றார்கள்:**

எளியவன் சிறுவனாக இருந்தேன். அப்போது எனது வயது 12-13 இருக்கும். மார்க்கத்தைப் பற்றி முற்றிலும் எதுவும் தெரியாது. குர்தாஸ்பூரில் ஒரு உயர்நிலைப்பள்ளியில் ஏதோவொரு வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது மவ்லவி அப்துல் கரீம் என்ற எதிராளியின் வழக்கு நடந்து வந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது சஹாபாக்களுடன் உயர்நிலைப் பள்ளியின் வடக்குப்புறம் உள்ள தஹ்ஸீல்வாலா குளத்தருகே தங்கி இருந்தார்கள். எளியவன் பள்ளிக்கூடத்தை விட்டு விட்டு அவர்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று அங்கேயே நின்று கொண்டிருந்தேன். அன்னாரின் அருளுக்குரிய முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவர்கள் மீது பேரன்பு கொண்ட ஒருவரிடம் (அவர் பெயர் தெரியவில்லை) அவரது வலக்கையில் பெரிய விசிறி இருந்தது. அப்போது நான் சிறுவனாக இருந்தேன். மிகவும் வேகமாக விசிறியை விசிறிக் கொண்டிருந்தார். நீண்ட நேரம் நின்று கொண்டிருந்தார். அதே கையிலேயே விசிறியை வைத்திருந்தார். விசிறிக் கொண்டேயிருந்தார். எனக்கு வியப்பாக இருந்தது. கை சோர்ந்து போகாதா? மெதுவாகவும் விசிறவில்லை. மாறாக மிகவும் வேகமாக விசிறினார். மின் விசிறி போன்று வேகமாக விசிறினார். ஏனெனில் அது வெயில் காலமாக இருந்தது. இரண்டாவது முறை மூன்றாவது முறை வந்து பார்த்தேன். அவர் அதே நிலையில்தான் இருந்தார். இது என்ன மந்திர வித்தை? விசிறி பெரியது. ஒரே கையால் நாள் முழுவதும் விசிறிக் கொண்டே இருக்கிறாரே? என்று வியந்தேன். உண்மையான பேரன்பு கொண்டவராக இருந்தார் என்பது இப்போது விளங்குகிறது.

**ஹஸ்ரத் மதத் கான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை எனது ஊரில் ரமலான் மாதத்தில் ஓர் எண்ணம் வந்தது. இம்முறை காதியான் போய் நோன்பு வைக்க வேண்டும். அங்கேயே ஈது தொழுது விட்டு பிறகு வேலைக்குப் போவோம் என்ற எண்ணம் வந்தது. அந்நாட்களில் இராணுவத்தில் புதிய ஆட்கள் நிறைந்திருந்தனர். இராணுவத்தில் ஜுனியர் நிலை, ஆபீஸர் என்று ரேங்க் இருந்தது. நான் வேலைக்கு செல்லும் முன் காதியான் செல்ல வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தது. ஹுஸீருடைய அருளுக்குரிய முக தரிசனம் செய்ய வேண்டும். மீண்டும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கையில் பைஅத் செய்யும் வாய்ப்பு பெற வேண்டும் என்ற விருப்பம் ஏற்பட்டது. ஏனெனில் எனது முதல் பைஅத் 1895 அல்லது 1896-ல் நடந்தது. அதுவும் கடிதம் மூலமாக நடந்தது. மேலும் நான் முதன் முதலாக காதியான் செல்லும் வாய்ப்பும் இதுதான். எனவே எனது உள்ளத்தில் விருப்பம் மேலோங்கி இருந்தது. எப்படியாவது காதியான் சென்று ஹுஸீர் (அலை) அவர்களைத் தரிசிக்க வேண்டும். வேலைக்குப் போய் விட்டால் பிறகு ஹுஸீர்

(அலை) அவர்களை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்குமோ கிடைக்காதோ இறைவனே அறிவான். எனவே அவர் முதலில் காதியான் போவோம். ஹுஸுர் (அலை) அவர்களை பார்த்து விட்டு வருவோம். பிறகு திரும்பி நமது வேலைக்குச் செல்வோம் என்று விரும்பினார். இவ்வகையில் காதியான் வந்து ஹுஸுர் அவர்களை தரிசித்தேன். அப்போது எனது உள்ளத்தில் ஓர் எண்ணம் எழுந்தது. முழு காஷ்மீரையும் எனக்கு தந்தாலும் சரி. நான் காதியானை விட்டு வெளியில் எங்கும் போகக் கூடாது. ஈர்ப்பு சக்தி என்னை காதியானை விட்டு திருப்பிச் செல்ல விடாமல் நிர்ப்பந்தித்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது அருளுக்குரிய முகத்தைப் பார்ப்பதை விட்டு விட்டு காதியானை விட்டு வெளியில் செல்வது இயலாததாகி விட்டது. அவர்களைப் பார்த்ததும் அனைத்தையும் மறந்தேன். வெளியில் 1000 ரூபாய் சம்பளமே கிடைத்தாலும் யாருக்கு வேண்டும்? வெளியில் போய் விட்ட பிறக இந்த ஒளிமிக்க முகம் ஒருபோதும் தென்படாதே என்ற எண்ணம் தோன்றியது. நான் இந்த எண்ணத்தால் எனது ஊருக்குப் போகும் எண்ணத்தை விட்டு விட்டேன். இன்று அல்லது நாளை எனக்கு மரணம் வந்தால் ஹுஸுரே எனக்காக ஜனாஸா தொழ வைப்பார்கள். அப்போது எனது குறிக்கோளும் நிறைவேறி விடும். அல்லாஹ்வும் திருப்தி அடைவான் என்று கருதி காதியானிலேயே தங்க விரும்பினேன். ஒவ்வொரு நாளும் இங்கு ஓர் அறையில் ஹுஸுரிடம் துஆக்காக எழுதி வீடு வாசலில் சென்று யாரிடமாவது கொடுத்து அனுப்புவேன். இது எனது வழக்கமானது. எனது இந்த செயலால் ஹுஸுர் கோபமுற்று விடக்கூடாதே என்ற பயமும் இருந்தது. எப்போதும் இப்படி தொல்லை கொடுப்பதாக நினைத்துக் கொள்ளக் கூடாதே என்ற பயம் இருந்தது. ஆனால் எனது பயம் தவறு என்று தெரிய வந்தது. காரணம் ஒருநாள் ஹுஸுர் எனக்கு எழுத்துப்பூர்வமாகவே இவ்வாறு பதில் அனுப்பினார்கள். நீங்கள் மிகச் சிறந்த ஒரு பழக்கத்தை தொடங்கி உள்ளீர்கள். எனக்கு ஞாபமூட்டக் கொண்டிருக்கிறீர்கள். இதனால் நானும் உங்களுக்காக அல்லாஹ்விடம் துஆ செய்து கொண்டிருக்கிறேன். இன்ஷா அல்லாய் இனியும் செய்வேன்.

**மவ்லவி ஜமாலுத்தீன் சாஹிபின் மகன் ஹஸ்ரத் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் கூறுகிறார்:**

எனக்கு ஏறத்தாழ 20 வயது இருக்கும் போது, குர்தாஸ்பூரில் ஜெஹ்லமி உடைய வழக்கில் தீர்ப்பு வழங்கப்படவிருந்தது. ஒருநாள் முன்பாகவே நான் அங்கு சென்றேன். அங்குள்ள ஒரு வீட்டில், ஹஸ்ரத் ஹுஸுர் (அலை) அவர்கள் தங்கியிருந்தார்கள். அது வெயில் காலமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள ஓர் அறையில் அமர்ந்திருந்தார்கள. அங்கு எனது தந்தை மியான் ஜமாலுத்தீன் சாஹிப் மற்றும் இமாமுத்தீன் சாஹிப் செக்வானி, சவுத்ரி அப்துல் அஸீஸ் சாஹிப் ஆகியோர் அங்கு இருந்தனர். நான் அங்கு சென்று ஹுஸுருக்கு விசிறி வீசினேன். ஹுஸுர் என்னைப் பார்த்தார்கள். எனது தந்தை ஜமாலுத்தீன் சாஹிபைப் பார்த்து புன்சிரித்தவாறு கூறினார்கள். மியான் இஸ்மாயில் சாஹிபிடம் வந்து நற்கூலியில் பங்கு பெற்று விட்டார். இந்த சிறிய தொண்டினால், ஹுஸுர் (அலை) அவர்கள் மகிழ்ச்சி அடைந்தது எனக்கு இன்னும் நினைவில் உள்ளது. உள்ளத்தில் இன்பம் பிறக்கிறது.

**ஹஸ்ரத் ஷேக் அஸ்கர் அலி சாஹிப் அறிவிக்கின்றார்:**

பொதுவாக ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்கள் வெளியிலிருந்து வந்த நண்பர்கள் விடைபெற்றுச் செல்வதற்காக அனுமதி கேட்டால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் மீண்டும் மீண்டும் அடிக்கடி வருமாறு கூறுவார்கள். சில நேரங்களில் இன்னும் சிறிது காலம் தங்குங்கள் என்பார்கள். இவர் இன்னும் சிறிது காலம் தங்க முடியும் என்று யாரைக் குறித்து ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களது உள்ளத்தில் எண்ணம் தோன்றுமோ அவரை இன்னும் தங்குங்கள் என்பார்கள். எல்லாரையும் இன்னும் தங்குங்கள் என்று கூறுகூதில்லை. மேலும் நண்பர்களுக்கும் ஹுஸுர் (அலை) அவர்களைப் பிரிவது பெரும் கஷ்டமாகவே இருந்தது. ஒவ்வொரு நண்பரும் பிரிந்து செல்லும் போது கை குலுக்கி அனுமதி பெற்றுச் செல்வர். எவ்வளவு நேரம் ஆனாலும் சரி, முஸாபஹா செய்து அனுமதி பெறாமல் எனக்கு தெரிந்த வரை எவரும் சென்றதில்லை. சிலருக்கு முஸாபஹா செய்யும் வாய்ப்பு மிக தாமதமாக கிடைக்கும். இரயிலுக்கு குறித்த நேரத்தில் சென்று சேர முடியாமல் போய் விடலாம் என்ற நிலை இருந்த போதிலும் அல்லாஹ்வின் செயலாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பரக்கத்தினால் வண்டி தாமதமாக பட்டாலா வரும். அப்போது அவர்கள் இரயிலில் ஏறிய சம்பவங்களும் பல உள்ளது.

அவர் தனது சம்பவத்தை எழுதுகிறார்: எனக்கு அதுபோன்ற ஒரு சம்பவம் நடந்தது. நாங்கள் தாமதமாக சென்றோம். அந்த நாளில் குதிரை வண்டியும் கிடைக்கவில்லை. நாங்கள் சில நண்பர்கள் நடந்தே சென்றோம். அன்று 6.00 மணிக்கு இரயில் பட்டாலா வரும் நேரமாக இருந்தது. அதில் செல்ல வேண்டும் என்பது திட்டமாகும். ஆனால் நேரம் குறைவாகவே இருப்பதாக அறிந்தோம். துஆ செய்து கொண்டிருந்தோம். வேகமாக நடந்தோம். சில பகுதிகளில் ஓடவும் செய்தோம். இறைவன் மிகவும் தைரியத்தை வழங்கி இருந்தான். ஸ்டேஷனை நெருங்கினோம். அப்போது வண்டி இன்னும் வரவில்லை என்று தெரிய வந்தது. சிறிது நேரத்திற்குப் பிறகு வண்டியில் நாங்கள் பயணம் ஆனோம். இது ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடைய பரக்கத் ஆக இருந்தது.

**முஹம்மது ஹுஸைன் சாஹிப் மர்ஹூம் ஈசாவின் மகன் மாஸ்டர் நாஸிர் ஹுஸைன் சாஹிப் கூறுகின்றார்க**

இந்த எளியவன் எப்போது ஹஸ்ரத் (அலை) அவர்களுடைய அவையில் அமரும் வாய்ப்பு கிடைத்தாலும் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டாலும் இந்த எளியவனின் வழக்கமாவது என்னிடம் உள்ள குறிப்பேடு மற்றும் பென்சில் கொண்டு ஹுஸூருடைய பேச்சில் நான் நடைமுறைப்படுத்த தகுந்த விஷயங்கள், வாழ்வின் அத்தியாவசியமான பயனுள்ள கருத்துக்களை எழுதி வைத்துக் கொள்வேன்.

**மியான் அப்துஸ் ஸத்தார் சாஹிபின் மகன், ஹஸ்ரத் அல்லா தத்தா சாஹிப் - தலைமையாசிரியர் கூறுகிறார்:**

அநேகமாக 1901 அல்லது 1902 –ல் ஒரு நவாப் சாஹிப் தனது பணியாளர்களுடன் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களிடம் சிகிச்சைக்காக காதியான் வந்திருந்தார். ஒரு நாள் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடன் நான் இருந்தேன். அப்போது நவாப் சாஹிபுடைய உறவினர்களான ஒரு முஸ்லிமும் ஒரு சீக்கியரும் வந்திருந்தனர். அவர் கூறினார். நவாப் சாஹிபுடைய பகுதியில் வைசிராய் வர உள்ளார். நீங்கள் சில நாட்கள் எங்களுடன் வர வேண்டும். அதாவது, முதல் கலீஃபா அவர்களை தம்முடன் வருமாறு கூறினார். முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் கூறினார்கள். நான் எனது உயிருக்கு உரிமையாளன் அல்லன். எனக்கு ஒரு எஜமானர் உண்டு. அவரிடம் கேளுங்கள். ளுஹர் நேரத்தில் மஸ்ஜித் முபாரக்கில் இந்தப் பணியாளர்கள் நபியுல்லாஹ் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களுடைய சமூகத்தில் வந்து கேட்டனர். ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்: மவ்லவி சாஹிப் அவர்களை நாம் நெருப்பில் போட்டாலும் மறுக்கமாட்டார்கள் என்பதில் சந்தேகமில்லை. தண்ணீரில் மூழ்கடித்தாலும் மறுக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் மூலமாக இங்கு ஆயிரக்கணக்கானோர் பயன் பெற்றுக் கொண்டிருக்கின்றனர். ஓர் உலகியல் வாதிக்காக இந்த அருளை அடைக்க முடியாது. நவாப் சாஹிபுக்கு வாழ்வு வேண்டுமெனில் இங்கு தங்கியிருந்து சிகிச்சை பெறட்டும். வைஷ்ராய் வருகிறார். எனவே இவரை அங்கு கூட்டிச் செல்கிறோம் என்பது முடியாது. இங்கு ஏழைகளுக்கு இவர்களால் பயன் கிடைக்கிறது. எனவே ஏழைகளுக்கே முதலிடம்.

அறிவிப்பு செய்கிறார். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய நடவடிக்கை எவ்வாறு வெளிப்பட்டது என்று பார்ப்போம். நெருப்பில் போட்டாலும், நீரில் மூழ்கடித்தாலும் செல்வார்கள் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வைத்திருந்த நம்பிக்கை அல்லவா? முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய வெளிப்பாடு எவ்வாறு இருந்ததென்றால் அதே நாளில், அஸர் தொழுகைக்குப் பிறகு முதல் கலீபத்துல் மஸீஹ் அவர்கள் குர்ஆன் தர்ஸ் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இன்று எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி என்றால் என்னால் பேச முடியவில்லை. எனது எஜமானர் என்னுடன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என்பதே என் கவலையாக இருக்கிறது. இன்று எத்துணை மகிழ்ச்சிக்குரிய தருணம் எனில் என்னைப் பற்றி அவர்கள் எவ்வாறு கருத்து தெரிவித்தார்கள்? நான் நூருத்தீனை நெருப்பில் இட்டாலும் மறுக்க மாட்டார். நீரில் மூழ்கடித்தாலும் மறுக்கமாட்டார் என்று கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் மாஸ்டர் வாதாவே கான் சாஹிப் அறிவிக்கின்றார்:**

ஓய்வு பெற்ற மாஸ்டர் அல்லா தத்தா சாஹிப் காதியான் தாருர் ரஹ்மத் முஹல்லாவில் தங்கியுள்ளார். குஜ்ரான்வாலாவில் ஜிலாதிகார் சிங் பள்ளியில் உதவி ஆசிரியராக பணியில் இருக்கும் போது கூறினார். ஒருமுறை நான் காதியான் போயிருந்தேன். மஸ்ஜித் முபாரக்கில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அமர்ந்திருந்தார்கள். மவ்லவி நூருத்தீன் சாஹிபும் அங்கு இருந்தார்கள். மவ்லவி நூருத்தீன் சாஹிபை சுட்டிக் காட்டி கூறினார்கள். இம்மனிதர் எனது உண்மையான பேரன்பர் ஆவார். பள்ளியை விட்டு வெளியில் கடைவீதிக்கு வந்ததும் மவ்லவி சாஹிப் கூறினார்கள். ஒரு மனிதருக்கு தனது பேரன்பிற்குரியவர் அவரைப் பார்த்து இவர் என் மீது பேரன்பு கொண்டவர் என்று கூறுவதை விட வேறு என்ன வேண்டும்?

**உமர் பக்ஷ் சாஹிபின் மகன் ஹஸ்ரத் மாஸ்டர் மவ்லா பக்ஷ் சாஹிப் கூறுகிறார்:**

நான் ஒருமுறை காதியான் வந்திருந்தேன். விடுப்பு இன்னும் ஓரிரு நாட்கள் எஞ்சி இருந்தன. நான் ஹுஸுரிடமிருந்து விடைபெற்றுக் காக்ரோபோ முஹல்லாவுக்கு வெளியில் வந்து பட்டாலாவுக்கு செல்லும் சாலைக்கு வந்து விட்டேன். தொடர்ந்து செல்வதற்குப் பணம் இல்லை. அங்கேயே வயலில் அமர்ந்து விட்டேன். அங்கிருந்து தாரை தாரையாக அழுதேன். திரும்பி வந்து விட்டேன். தொடர்ந்து செல்ல முடியவில்லை. நிம்மதியற்ற நிலை இருந்தது. அங்கேயே அமர்ந்து விட்டு திரும்பி வந்து விட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீதிருந்து அன்பின் தாக்கத்தால் பருவகால விடுமுறை முடிந்த பிறகு சென்றார்.

**ஹஸ்ரத் மவ்லவி முஜீபுர் ரஹ்மான் சாஹிப் கூறுகின்றார்கள்:**

நான் எனது தந்தையாருடன் 1899 -ல் காதியான் சென்றேன். பட்டாலாவில் இருந்து குதிரை வண்டியில் ஏறி காதியான் அடைந்தேன். வண்டி காதியான் விருந்தினர் இல்லத்தை அடைந்ததும் தந்தையார் குதித்து ஓடிச் சென்றார். வண்டிக்காரர் சாமான்களை எடுத்து வைத்து விட்டு வியப்புடன் நின்றார். தந்தையார் வழக்கத்திற்கு மாற்றமாக வண்டியிலிருந்து குதித்து ஏன் ஓடினார்? சிறிது நேரத்தில் ஹாபிஸ் ஆமது அவர்கள் வெளியில் வந்தார்கள். அவர் என்னிடம் இந்த சாமான்கள் மியான் ஹபீபுர் ரஹ்மான் சாஹிப் உடையதா? என்று கேட்டார். நான் ஆம் என்றதும் சாமான்களை உள்ளே விருந்தினர் இல்லத்திற்குள் தூக்கிச் சென்றார். சிறிது நேரத்திற்குப் பிறகு தந்தையார் வந்தார். மறுநாள் ஃபஜ்ர் தொழுகைக்குப் பிறகு தந்தையார் என்னை அழைத்துச் சென்றார். வாசலுக்கு அருகில் சென்றதும் ஹுஸுர் தானே வந்து கதவைத் திறந்தார்கள். நாங்கள் அறைக்குள் சென்றோம். அது பைத்துல் ஃபிக்ர் உடன் இருந்த அறையாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது முன்னால் உள்ள மேஜையில் நிறைய நூல்கள் இருந்தன. அன்னார் அமர்ந்ததும், நான் ஒரு கட்டிலில் அமர்ந்தோம். அது அருகில் இருந்தது. எனது தந்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். அதன் பின் எனது தந்தையார், நான் முஜிப்புர் ரஹ்மான் பைஅத்திற்காக அழைத்து வந்துள்ளேன். இவர் பைஅத் செய்தவர் தானே. நீங்கள் பைஅத் செய்துள்ளீர்கள். இவர் பிறப்பிலேயே அஹ்மதியாகப் பிறந்துள்ளார். தந்தையார் சேர்ந்தால் பிள்ளைகளும் அதில் அடங்குவர். எனவே பைஅத் முதலிலேயே நடந்து விட்டது என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள். தந்தையார் கூறினார்: இவன் பைஅத் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றேன். அதனால் துஆவின் பரக்கத் அவனுக்கு கிடைக்கும். சரி இன்று மாலை பைஅத் வாங்குவோம் என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்.

பிறகு அடுத்த நாள் மக்ரிப் தொழுகைக்குப் பிறகு எளியவன் இன்னும் சில நண்பர்களுடன் சேர்ந்து பைஅத் செய்தேன். பைஅத் செய்த பிறகு எனக்கு புதியதோர் உணர்வு ஏற்பட்டது. காதியான் வந்தடைந்ததும் என் தந்தை குதிரை வண்டியிலிருந்து இறங்கி ஓடியதும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை சந்திக்கத்தான் என்று புரிந்தது. அந்த பேரன்புதான் அவரின் நிம்மதியைக் குலைத்தது. இறங்கியதுமே ஹுஸுரின் முன்பாக போய் விட்டார். காதியான் சேர்ந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சமூகத்தில் சென்று விடுவது எனது தந்தையாரின் வழக்கமாக இருந்தது. தினமும் காலை வேளையில் தனியாகவும் சந்திப்பார்கள்.

**ஹஸ்ரத் ஹாஜி முஹம்மது மூஸா சாஹிப் அறிவிக்கின்றார்:**

ஒருமுறை எனது 4 வயது மகன் அப்துல் மஜீத், ஹஸ்ரத் சாஹிபை நான் கட்டித் தழுவ வேண்டும் என்று அடம் பிடித்தார். மக்ரிபிலிருந்து சுபுஹ் வரை இதை கூறிக் கொண்டிருந்தார். இரவு முழுவதும் மிகவும் தொல்லை கொடுத்தான். காலையில் எழுந்ததும் முதல் வண்டியில் பட்டாலா வந்தோம். அங்கிருந்து வண்டியில் காதியான் வந்தோம். போனதும் ஹுஸூருக்கு தூது அனுப்பினோம். அப்துல் மஜீத் உங்களை கன்னத்தோடு கன்னம் வைத்து தழுவ விரும்புகிறான் என்று தூது அனுப்பினோம். 4 வயது சிறுவன் தான். ஹுஸூர் அப்போது வெளியில் வந்தார்கள். அப்துல் மஜீத் அன்னாரின் காலைக் கட்டித் தழுவினான். இவ்வாறு ஹுஸூரை சந்தித்தான். 4 வயது பையன் கூறினான். இப்போது எனக்கு திருப்தி கிடைத்து விட்டது.

**ஹஸ்ரத் மியான் அப்துல் கப்பார் சாஹிப் ஜிரா அறிவிக்கின்றார்கள்:**

ஒருமுறை ஹஸ்ரத் சாஹிப் படிக்கட்டில் இறங்கி வந்தார்கள். அஹ்மதிய்யா பஸாரில் வந்து நின்றார்கள். எனக்கு நினைவு உள்ளது. ஹுஸூர் அவர்கள் கைத்தடியை தமது இடுப்பில் வைத்து கீழே ஊன்றி அதில் சாய்ந்து நின்றார்கள். நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மருத்துவமனைக்கு அருகில் வந்து நின்றேன். ஹுஸூரைப் பார்த்து விட்டு எனது தந்தையிடம் கூறினேன். பாபா! ஹஸ்ரத் சாஹிப் வந்து விட்டார்கள். தந்தையார் கூறினார்கள். சத்தம் போடாதே! உன் சப்தம் கேட்டு மக்கள் அருகில் ஓடிச்சென்று கூடி விடுவார்கள். ஹுஸூர் வார்த்தைகளைக் கேட்கும் இன்பம் கிடைக்காமல் போய் விடும்.

இதுவும் அன்பின் பேச்சு தான். நமக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கும் இடையில் எவரும் வந்து விடக் கூடாது. அவர்களது பேச்சைக் கேட்க முடியாத அளவுக்கு மக்கள் அவர்களை சூழ்ந்து விடக்கூடாது. நாம் அவர்களை நெருங்க முடியாமல் போய் விடக் கூடாது. இவ்வாறு நாங்கள் எழுந்தோம். ஹுஸூரிடம் முஸாபஹா செய்தோம். ஹஸ்ரத் சாஹிப் எனது தந்தையாரிடம் கூறினார்கள். மியான் குலாம் ரஸூல்! அமிர்தரஸ் செய்திகள் ஏதாவது இருந்தால் கூறுங்கள். தந்தையார் கூறினார். ஹுஸூர் மக்கள் இடையில் வந்து பேசத் தொடங்குவர். நான் ஓர் ஏழை. எனது பேச்சு தடைபட்டு விடும். ஹுஸூர் கூறினார்கள்: இன்று நீர் தான் பேச வேண்டும். வேறு யாருடைய பேச்சும் இருக்காது. முஹல்லா தாருல் அன்வர் பக்கமாக ஹுஸூர் நடக்கச் சென்றார்கள். அங்கு ஹஸ்ரத் சாஹிபின் வீடு இருந்தது. அங்கு சென்றார். காஜா கமாலுத்தீன் சாஹிபுடைய மாமனார் கலீபா ரஜிபுத்தீன் சாஹிப் காஷ்மீரி மொழியில் கூறினார். அமைதியாக இருங்கள். நாம் பேச வேண்டியதுள்ளது.

ஹுஸூர் கூறினார்கள்: இன்று நாம் மியான் குலாம் ரஸூலுடன் பேசுவோம். அவர் நம்முடன் பேசுவார். மியான் குலாம் ரஸூலின் பேச்சு தவிர வேறு யாரும் பேசக் கூடாது என்று கூறி அவரை அமைதியாக இருக்கச் செய்தார்கள். முல்லாக்களைப் பற்றி பேச்சு நடந்தது. எனக்கு நினைவுள்ளது. எனது தந்தையார் ஹுஸூரிடம் அமிர்தசரஸில் உள்ள ஒரு முல்லாவைப் பற்றி கூறிக் கொண்டிருந்தார். அந்த முல்லா என்னிடம் மிர்ஸா சாஹிபை விட்டு விடு. நான் உங்களுக்கு நிறைய பணம் தருகிறோம். நான் அதற்கு பதில் கூறினேன். ஒரு பெரும் வணிகர் ஒரு பெண்ணை உலக ஆசையின் காரணமாக அந்தப் பெண்ணை விட முடியாத போது, நான் இறைவனின் நபியை எப்படி விட முடியும்? அதாவது உலகவாதி தனது உலகக் காதலுக்காக உலகையும் அழித்து ஆகிரத்தையும் அழித்துக் கொள்கிறார். பெயரும் கெட்டுப் போகிறது. நான் இறைவனது அன்பிற்காக இறைவனது நபியுடன் கொண்ட அன்பினால் பிணைக்கப்பட்டுள்ளேன். அதனை எப்படி விட முடியும்? இதன் மூலம் தான் எனது இம்மை மற்றும் மறுமை சீர்பெற வேண்டும் என்று நாம் நம்புகிறேன்.

**ஹஸ்ரத் ஷேக் ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

எனது சகோதரர் மெஹர் அலி சாஹிப் 8வது வகுப்பு படித்து வந்தார். அவனுக்கு வயிற்றுப்போக்கு நோயின் காரணமாக ஆறு மாதம் வரை சிகிச்சை செய்து வந்தோம். குணமாகவில்லை. நாங்கள் முற்றிலும் நம்பிக்கை இழந்தோம். காதியான் கொண்டு வந்தோம். நான் ஓர் அன்பிற்குரிய ஒரு சிறுவனுக்கு ஜனாஸா தொழு வைப்பேன் என்று ஹஸ்ரத் சாஹிபிற்கு இல்ஹாம் வந்திருந்தது. ஹுஸூர் தமது ஒரு பையனைக் குறித்து இருக்கலாம் என்று கருதினார்கள். மெஹர் அலியை இங்கு கொண்டு வந்ததும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது

(அலை) அவர்கள் சிகிச்சை அளித்தார்கள். சிறிது காலம் கிடைத்தது. இந்த சிறுவன் உயிர்பிழைக்க முடியாது என்று ஹுஸூருக்கு இல்ஹாம் வந்தது. உடனே ஹஸ்ரத் ஹாபிஸ் ஆமத் சாஹிபிடம் கூறினார்கள். இந்த சிறுவனை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள். இவன் பிழைக்கமாட்டான். இங்கு வைத்து இறந்து விட்டால் உறவினர்கள் இங்கு வர வேண்டிய சிரமம் ஏற்படும். நாங்கள் தொட்டில் தயார் செய்து பஜார் வரை எடுத்துச் சென்றோம். ஆனால் அவன் நான் ஒருபோதும் திரும்பிச் செல்ல மாட்டேன் என்று சிறு வயதுக்குரிய இயல்புடன் கூறினான். 12-13 வது சிறுவன் கூறினான். மரணிப்பதாயின் இங்கேயே மரிப்பேன். நான் மிர்ஸா சாஹிபின் சமூகத்தில் தான் இருப்பேன். என்னை திருப்பி இங்கே கொண்டு வராவிட்டால் நான் கீழே குதித்து விடுவேன் என்றான். நாங்கள் திருப்பி கொண்டு வந்தோம். ஹஸ்ரத் சாஹிபிற்கு தகவல் தெரிவித்தோம்.

அன்னார் கூறினார்கள்: சரி விடுங்கள். அவன் இங்கேயே மரணிப்பான். ஆனால் நினைவில் கொள்ள வேண்டும். ஓடி ஆடித் திரியும் நிலையில் மரணித்து விடுவான். இவன் நோயுற்று படுக்கையில் மரணிப்பான் என்று நினைக்க வேண்டாம். அவன் மரணிக்கவிருந்த நாளில் பஜாருக்குச் சென்றான். பால் குடித்தான். மாலையில் வீட்டிற்கு வந்தான். தாயாரிடம் கூறினான். அம்மா இப்போது விளக்கு அணையப்போகிறது என்றான். மாலையாகி விட்டது! எனவே விளக்கை ஏற்றச் செல்கிறான் என்று தாயார் நினைத்தாள். மகன் கூறியதற்கு அந்தப் பொருள் இல்லை. இதுதான் பொருள். அவனுக்கும் அது தெரிந்திருந்தது. அதாவது தாயார் அவரை நின்ற நிலையில் தன் மீது சாய்த்துக் கொண்டார். ஆனால் அதே நிலையில் அவன் உயிர் பிரிந்தது. ஹஸ்ரத் சாஹிப் ஜனாஸா தொழுவித்தார்கள். அங்கேயே அடங்கப்பட்டான். ஹஸ்ரத் சாஹிப் எவ்வளவு நீண்ட நேரம் தொழுவித்தார்கள் என்றால் நாங்கள் சோர்ந்து போனோம். மக்கள் அழுது கொண்டிருந்தார்கள்.

**மியான் அப்துர் ரஹ்மான் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

நான் மிகவும் ஆர்வத்துடன் வழக்கை கேட்பதற்காக ஒருநாள் முன்பாக ஜெஹ்லம் வந்து சேர்ந்தேன். இது ஜெஹ்லமில் நடந்த வழக்காகும். வண்டி வருவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன் ஸ்டேஷனுக்கு வந்தடைந்தேன். நான் ஸ்டேஷனில் பார்க்கிறேன். பத்து அடிக்கு ஒரு போலீஸ் நிற்கிறார். மக்கள் சுவரில் ஏற முயற்சி செய்கிறார்கள். ஆனால் போலீஸ் அவர்களை உள்ளே விடவில்லை. வண்டி வரும் முன் மக்கள் நெருக்கடி மிகவும் கூடி போலீஸால் சமாளிக்க முடியாத நிலையில் சுவரேறி மக்கள் உள்ளே குதித்து விட்டனர். ஹஸ்ரத் சாஹிப் வண்டியிலிருந்து இறங்கியதும் வெளியே வர போலீஸ் உதவியுடன் ஒரு பாதையை அஹ்மதி நண்பர்கள் அமைத்தனர். அதில் முதல் ஆளாக ஹஸ்ரத் மவ்லா பக்ஷ் சாஹிப் என்ற ஸியால்கோட்டியின் பிரபல அஹ்மதி கடந்து சென்றார். ஹஸ்ரத் சாஹிப் வந்தார்கள். அவர்களுடன் காபூலைச் சேர்ந்த அப்துல் லத்தீஃப் சாஹிப் ஷஹீது மற்றும் முஹம்மது அஹ்ஸன் சாஹிப் ஆகியோரும் மூடிய வண்டியில் அமர்ந்தனர். மக்கள் கூட்டத்தில் வண்டியை நகர்த்துவது சிரமமாகி விட்டது. அப்போது குலாம் ஹைதர் தாசில்தார் என்பவர் மிகவும் அன்புடன் ஏற்பாடுகளை செய்திருந்தார். ஒருபுறம் போலீஸ்களை ஒழுங்குபடுத்துமாறு விரைவுபடுத்தினார். மறுபுறம் மக்களை கட்டில் வைக்க முயன்றார். கையில் ஒரு தடியை வைத்துக் கொண்டு கம்பீரமாக சுற்றினார். ஹுஸூர் தங்குமிடம் வரை நலமாக சென்று சேர வேண்டும் என்று துஆ செய்து கொண்டிருந்தோம். அப்போது மவ்லவி முல்ஹானுத்தீன் சாஹிப் ஜெஹ்லமி என்பவர் வண்டிக்கு முன் ஓடினார். இடையிடையே அவர் ஆர்வத்தின் காரணமாக இந்த எளியவன் வீட்டிற்கு முதலாளி வந்துள்ளார் என்று கூறினார். இவ்வாறு ஹுஸூர் தங்குமிடம் வந்து சேர்ந்தார்கள்.

**ஹஸ்ரத் மியான் வசீர் முஹம்மது சாஹிப் அறிவிக்கின்றார்:**

நான் வந்த நாளில் என்னுடன் இன்னொருவரும் இருந்தார். இங்கு வந்து நோயுற்றார். நான் அப்போது நோயுற்றிருந்தேன். ஆனால் நலம் பெற்று விட்டேன். சில நாட்களுக்கு முன் எனது நிலை, சில கவளங்கள் கூட ஜீரணமாகாமல் இருந்தது. இங்கு வந்து ஓர் இரவில் இரண்டு ரொட்டி சாப்பிட்டேன். திரும்பி அமிர்தசரஸ் சென்றேன். பழைய நிலை வந்து விட்டது. முதல் முறை நான் ஹஸ்ரத் சாஹிபை சந்தித்தேன். மஸ்ஜித் முபாரக்குடன் அருகிலிருந்த சிறு அறையில் உளூ செய்து கொண்டிருந்தேன். பிறகு ஹஸ்ரத் அக்தஸ் (அலை)

அவர்கள் உள்ளே வந்தார்கள். ஹுஸூர் (அலை) அவர்களுடைய முகத்தைப் பார்த்தேன். அறிவு திகைப்படைந்தது. இறைவனின் உண்மையான அடியாரைப் பார்த்து தன் நிலை மறந்தேன். ஜுமுஆ நாளில் ஹஸ்ரத் சாஹிபின் அருகில் நின்று தொழும் வாய்ப்பு பெற்றேன். அப்போது ஹஸ்ரத் சாஹிபைக் கண்டு மிகவும் அழுதேன். அதாவது ஹஸ்ரத் சாஹிபை மெதுவாகப் பார்த்ததும் அதன் விளைவாக கடும் அழுகை வந்தது. தொழுகையிலும் அழுகை வந்தது. அதற்கு முன்னரும் அழுகை வந்தது. சூஃபியாக்களின் மஸ்ஹபில் இதனை ஒரு குளியல் என்று அழைக்கப்படுகிறது. அஸர் நேரத்தில் மீண்டும் சந்தித்தேன். ஹுஸூர் கூறினார்கள்: எப்படியிருக்கிறீர்கள்? நான் கூறினேன். ஹுஸூர் நான் இப்போது நன்றாக ஆகி விட்டேன். நான் முதன் முறை காதியான் வரும்போது லங்கர்கானா எதுவும் இருந்ததில்லை. ஹஸ்ரத் சாஹிபின் வீட்டிலிருந்து ரொட்டியும் ஊறுகாயும் வந்தது. உண்டேன். அநதக் காலத்தில் இந்த அறையில் அச்சகம் இருந்தது. இப்போது அதில் மோட்டார் உள்ளது. அதில் விருந்தினர் தங்கியிருந்தனர். நானும் அங்கு தங்கியிருந்தேன்.

**ஹஸ்ரத் டாக்டர் குலாம் கவுஸ் சாஹிப் அறிவிக்கின்றார்கள்:**

மீர் மஹ்தி ஹஸன் சாஹிப் கூறினார்கள். ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் என்னை ஐஸ்கட்டிகள் வாங்குவதற்காக அமிர்தசரஸ் அனுப்பினார்கள். நான் இரயிலில் ஏறி அமர்ந்தேன். வழியில் வண்டியிலிருந்து தலையை வெளியே நீட்டியபோது பட்டுத்துணியால் செய்யப்பட்ட எனது தொப்பி காற்றி பறந்து போய்விட்டது. அமிர்தசரஸிலிருந்து ஐஸ்கட்டி வாங்கி திரும்பும் போது மிர்ஸா நாஸிர் நவாப் சாஹிப் கூறினார்கள். உம்மை யாராவது அடித்து விட்டார்களா? நான் இல்லை என்றேன். பிறகு திறந்த தலையுடன் இருக்கிறீரே ஏன்? நான் சொன்னேன். இரயிலில் வரும்போது தொப்பி பறந்து விட்டது. அவர் ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று கூறி விட்டார். ஹஸ்ரத் சாஹிப் கூறினார்: ஆம்! நாம் அவருக்கு தொப்பி கொடுப்போம். நான் கேட்கவில்லை. அவர் ஓரிரு அனாக்களுக்கு தொப்பி வாங்கினார். இரண்டு அனாக்களில் தொப்பி கிடைத்தது. அதனை தலையில் வைத்தார். ஆறு மாதங்கள் கழித்து ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் எனக்கு ஒரு தொப்பியும் அல்பாக்கா கோட்டும் காலணியும் வழங்கினார்கள். அல்பாக்கா கோட்டு என்பது அமெரிக்காவில் வாழும் ஒரு விலங்காகும். அதன் ரோமத்திலிருந்து தயாரிக்கப்பட்டதாகும். நல்ல சூடு இருக்கும். அடுத்து சூவும் கொடுத்தார்கள். கோட்டை நான் அணிந்தேன். பிறகு அது சீக்கிரமே கிழிந்து விட்டது. தொப்பியை தலையில் வைத்துக் கொண்டேன். சூவை எனது தந்தையிடம் கொடுத்தேன். திரும்பிச் செல்லும் வழியில் ஒரு டெபுடி ரேஞ்சர் என்னிடம் கூறினார். மீர் சாஹிப் உமது தலையிலுள்ள தொப்பி புழுக்காகி விட்டது. நான் அமிர்தசரஸில் புதிய தொப்பி வாங்கித் தருகிறேன். நான் கூறினேன். இதுபோன்ற தொப்பி எங்கும் கிடைக்க முடியாது. பூமியிலும் கிடைக்காது. வானத்திலும் கிடைக்காது. அவர் ஏன் அப்படி? என்று கேட்டார். இது தூய மஸீஹின் தலையில் இரு வருடம் இருந்தது என்றேன். நல்லது என்றார். நல்ல இயல்பு கொண்டவர். பிறகு அவரும் ஹுஸூரின் முரீது ஆகி விட்டார்.

**ஹஸ்ரத் மவ்லவி அஸீஸுத்தீன் சாஹிப் கூறுகின்றார்:**

எத்தனை தடவை நான் ஹஸ்ரத் சாஹிபை சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றாலும் சுமார் 50 – 60 – 70 தடவைகள் இருக்கும்; வந்த உடனேயே எனது தலைப்பாகையைக் கழற்றி வைத்து விட்டு ஹஸ்ரத் சாஹிபின் இரு கைகளையும் எனது தலையில் வைப்பேன். நானாக விடாத வரை ஹுஸூர் தனது கையை இழுக்க முயன்றதில்லை. இதன் விளைவால் எனக்கு இப்போது 81 வயதாகி விட்டது. நான் ஒரு நாளும் நோயுற்றதில்லை. இருப்பினும், காதியானில் இருக்கும் போது சின்னச்சின்ன காயங்கள் ஏற்பட்டுள்ளன.

**ஹஸ்ரத் ஷேக் மஸித்தா சாஹிபின் மகன் ஹஸ்ரத் ஷேக் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் கூறினார்கள்:**

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஸ்ஜித் முபாரக்கில் இருந்து தொழுகையை முடித்து விட்டு வரும் போது எங்களது மகிழ்ச்சிக்கு அளவே இருக்காது. அல்லாஹ்வின் மஃரிஃபத்தினை விளங்கி இறை நேசத்தின் பானத்தை நாம் அருந்துவோம் என்று நாங்கள் அறிந்திருந்தோம். அதனால் எங்கள் உள்ளத்தில் கறைகள் அகலும். நாங்கள் எங்கள் அன்பிற்குரியவரின் அந்த அருளுக்குரிய முகத்தை ஆர்வமுடன் பார்த்து வந்தோம். அருளுக்குரிய முகத்தை ஆர்வத்துடன் பார்த்து வந்தோம். அருளுக்குரிய உதட்டிலிருந்து அவர்கள்

கூறியவற்றை நான்றாக கேட்போம். அவர்கள் வார்த்தையைக் கேட்பதற்கு சோர்ந்ததில்லை; தடுத்ததுமில்லை. கோபத்துடன் அவர்களை பேசிப் பார்த்ததில்லை.

பத்ருத்தீன் அஹ்மது சாஹிப் பிரசிடெண்ட் அஹ்மதிய்யா ஜமாஅத் கராச்சி, ஹஸ்ரத் சாஹிப் ஸாதா அப்துல் லத்தீஃப் சாஹிபுடைய சீடராகிய சையத் ஹகீம் முஹம்மது உடைய சகோதரி ஹஸ்ரத் சிராஜ் பீபி சாஹிபா அறிவிக்கின்றார்கள்:

சின்னஞ்சிறு சிறுமிகளுக்கும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது அன்பிருந்தது. அதுபற்றி விளக்கப்படுகிறது. ஒருமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு தோட்டத்தின் அருகில் தனியாக நடக்கச் சென்றார்கள். மாமரத்தின் கீழ் தெற்கு வடக்காக அது நடந்தது. இப்போது கைவிடப்பட்ட ஒரு கிணற்றிற்கு அருகில் ஒரு வாசல் வழியாக மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிபுடைய தோட்டத்தில் உள்ள கதவைத் திறந்து சென்றார்கள். நானும் பின்னால் சென்றேன். ஹுஸூர் காலடிபட்ட அதே இடத்தில் காலை வைத்து நடந்தேன். அன்பின் காரணமாக செய்தேன். அவ்வாறு செய்வதால் பரக்கத் கிடைக்கும் என்று அறிந்திருந்தேன். கூறுகிறார்: எனது அசைவு கேட்டு ஹுஸூர் திரும்பிப் பார்த்தார்கள். பிறகு மீண்டும் நடந்தார்கள்.

**ஹஸ்ரத் மியான் முஹம்மது ஜுஹூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்:**

நாங்கள் காதியான் ஷரீபுக்கு ஜனாஸாவுக்குப் போய் விட்டு மறுநாளே ஊருக்கு திரும்பி விட்டோம். அதற்கு சுமார் 3-4 மாதம் பிறகு ஹுஸூர் லாஹூரில் வஃபாத் ஆகி விட்டார்கள் என்ற செய்தி திடீரென்று கிடைத்தது. எனது உறவினர் காஸி ஜெய்னுல் ஆபிதீன் சாஹிப் இந்த செய்தியைக் கேட்டு பைத்தியம் போன்று ஆகிவிட்டார். சிறிதும் யோசிக்கவில்லை. லாஹூர் ஸ்டேசன் சென்றோம். அங்கு பாபு நூர் அஹ்மத் சாஹிபிடம் காஸி சாஹிப் கூறினார். லாஹூருக்கு தந்தி கொடுத்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத் ஆனது உண்மைதானா? என்று விசாரியுங்கள் என்றார்கள். எங்களது நிலையைப் பற்றி அஹ்மதி அல்லாதவர்கள் எள்ளி நகையாடியவாறு எங்கள் பின்னால் வந்தனர். அவர்கள் உள்ளத்தில்பட்ட வார்த்தையெல்லாம் கூறியுள்ளனர். நாங்கள் துக்கத்தால் பைத்தியக்காரர்கள் போன்று ஆகிவிட்டோம். அஹ்மதியல்லாதோர் நீண்ட தூரம் வரை கேலி கிண்டல் செய்தவாறு பின்னால் வந்தனர். இறுதியில் சோர்ந்து திரும்பினர். இது அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மிகவும் வேதனை அளிக்கக்கூடிய சம்பவமாகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கலீஃபாவாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். அவரவர்கள் தத்தமது பைஅத் கடிதத்தை அனுப்பினோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உட்கார்ந்திருக்கக் கண்ட அந்த இடம் காலியாக இருப்பதைப் பார்த்து எமது உள்ளம் எங்கள் கட்டுப்பாட்டை இழந்தது. எப்போதும் எமது கண்கள் கண்ணீரால் நிரம்பின. மத்ரஸா அஹ்மதிய்யா வளாகத்தில் ஜல்ஸா நடந்தது. இக்கால ஜல்ஸாக்களைப் பார்க்கும் போது அது ஒரு சாதாரண ஜல்ஸாவாகவே இருந்தது. அதில் காஜா கமாலுத்தீன் சாஹிப், மிர்ஸா யாகூப் அலி, மவ்லவி சதுருத்தீன் சாஹிப் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் முன்னணியாக தென்பட்டனர். எல்லாரின் பார்வையும் இவர்கள் மீதே பட்டது. இவர்களைத் தவிர வேறு தகுதியானவர் எவரும் தென்படவில்லை. இவர்களே ஏற்பாட்டாளர்களாக இருந்தனர். திருக்குர்ஆன் திலாவத்துடன் கூட்டம் தொடங்கியது. பிறகு ஒரு நஸ்ம் பிராதரம் முன்ஷி ஸிராஜுத்தீன் சாஹிப் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பெருமை குறித்து பாடினார்கள். பிறகு ஒரு நஸ்ம் வேறு ஒருவர் படித்தார். அதற்குப் பிறகு இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஹ்மூது அஹ்மது சாஹிப் சொற்பொழிவாற்றினார்கள். அதாவது இது முதல் கலீபத்துல் மஸீஹ் உடைய காலத்தின் நிகழ்வாகும். இந்த ஜல்ஸா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வஃபாத்திற்குப் பிறகு நடந்த முதல் ஜல்ஸாவாகும். அந்த ஜல்ஸாவில் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் கூறினார்கள். ஃபிர்அவ்னுடைய கொடுமைகளால் பனீ இஸ்ராயீலின் கண்ணீர் வெளிப்பட்டது. பிறகு அது ஒரு வெள்ளமாக மாறி ஃபிர்அவனை மூழ்கடித்தது.

உருக்கத்தின் நிலையில் கஷ்டத்தின் நிலையில் கண்ணீர் பெருகும்போது அது பெரும் விளைவை ஏற்படத்துகிறது. இதனை பாகிஸ்தான் ஜமாஅத் குறிப்பாக நினைவில் கொள்ள வேண்டும். இன்று அதே கண்ணீர் வெளிப்பட வேண்டிய தருணமாகும்.

பனீ இஸ்ராயீலின் கண்ணீர் ஓர் ஆறாக மாறி ஃபிர்அவ்னை மூழ்கடித்தது. மேன்மைக்குரிய ஹுஸூர் எவ்வளவு சிறப்பாக சொற்பொழிவாற்றினார் எனில் கேட்டவர்கள் நெகிழ்ந்தனர். கூட்டம் முடிந்ததும் முதல்

கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தனது சொற்பொழிவை தொடங்கும் முன் கூறினார்கள். மிர்ஸா மஹ்மூது சாஹிப் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் கருத்து ஒருபோதும் எனது சிந்தனையில் கூட வரவில்லை.

பிறகு கூறினார்கள்: நண்பர்கள் இந்த இரண்டாவது வல்லமை தொடர துஆ செய்யுங்கள். இந்த வகையில் அங்கேயே துஆ செய்யப்பட்டது. மேலும் கூறினார்கள். மியான் சாஹிபிற்காகவும் துஆ செய்யுங்கள். அவரை தீய பார்வைகளின் தீங்கை விட்டும் அல்லாஹ் பாதுகாப்பானாக!

**ஹஸ்ரத் ஷேக் முஹம்மது இஸ்மாயில் சாஹிப் கூறுகிறார்கள்:**

நான் மஸ்ஜித் முபாரக் சென்று தொழும் போது தொழுகையில் இன்பமும் இறையச்சமும் உருவாகிறது. இறை நேசத்தால் நிறைகிறது. ஆனால் எனது நண்பர்களின் கண்கள் இந்த இறை ஒளியைக் காண்பதை விட்டும் விலகி உள்ளன. இது நம்மை நிம்மதியற்றவராக்குகிறது. இறை நேசத்தால் நிறைகிறது. இப்போது நினைவுக்கு வரும் போது உள்ளம் நிறைகிறது. அல்லாஹ்! அல்லாஹ்! அந்த இறை ஒளியைக் கண்டு உள்ளத்தின் கஷ்டங்கள் யாவும் விலகின. ஹஸ்ரத் அக்தஸ் உடைய ஒளிமிக்க முகத்தைப் பார்த்து விட்ட பிறகு எந்தக் கவலையும் இருப்பதில்லை. எந்த முறையீடும் இருப்பதில்லை. நாம் ஜன்னத்தில் இருக்கின்றோம் என்ற உணர்வு ஏற்படுகிறது. அவர்களைப் பார்த்த எமது கண்கள் அகலவில்லை. எத்தகைய தூய ஒளிமிக்கவர். அந்த இளைஞர் ஒரு நேரத் தொழுகை தொழுது விட்டு அடுத்த தொழுகைக்காக ஆயத்தப்படுபவர்களாக இருந்தனர். காரணம் அன்னாரின் அருகில் தமக்கு இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக இளைஞர்களாகிய எங்களிடம் அதற்காக போட்டி இருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அருகிலேயே எங்களுக்கு இடம் கிடைக்க வேண்டும் என்பதற்காக – அவர்களுடன் சேர்ந்து தொழ வேண்டும் என்பதறகாக போட்டி இருந்தது.

பிறகு மேலும் எழுதுகிறார்: அல்லாஹ்! அல்லாஹ்! எத்தகைய அருளுக்குரிய தூய இருப்பு. அவரது அன்பு எங்களை படைப்புகளை விட்டு தேவையற்றவர்களாக்கி விட்டது. பிறவற்றின் அன்பிலிருந்து எங்களை விடுதலை செய்யத்தக்க பொறுமையை வழங்கி விட்டது. எமக்கு எஜமானனின் சன்னிதானத்தை காட்டியது. அல்லாஹ் நமக்கும் பைஅத்தின் ஹக்கை நிறைவேற்றும் வாய்ப்பளித்து, அவர்களுடன் ஆற்றல் வாய்ந்த உறவை மிக மிக உறுதியாக்கிக் கொண்டு செல்ல வாய்ப்பினை வழங்குவானாக! இந்த உறவினால் நாம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முழுமையாகப் பின்பற்றி அல்லாஹ்வின் முஹப்பத்தைப் பெறுவோமாக! இப்போது ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இரு ஜனாஸா காயிப் தொழுகைகளையும் தொழுவிப்பேன். அவ்விரண்டுமே காதியானில் உள்ள சான்றோர்களான இரு பெண்மணிகளுடையதாகும்.

முதல் ஜனாஸா ரஷிதா பேகம் சாஹிபா மிஸ்திரி முஹம்மது தீன் சாஹிப் தர்வேஸ் உடைய மனைவி மர்ஹூம் காதியானைச் சேர்ந்தவர். மே 4 ம் தேதி அவர் வஃபாத் ஆனார்கள். வயது 85. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் மியான் பதஹ் தீன் சாஹிப் (ரலி) என்ற ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது சஹாபியின் மகளாவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் குடும்பத்திலுள்ள ஹஸ்ரத் ஆயிசா என்ற பெண் பிரபலமானவர். ஹஸ்ரத் அமமா ஜான் அவர்கள் அப்பெண்ணை மகளாக வளர்த்து வந்தார்கள். அவருடைய சகோதரர் மகளாவார். காதியானில் ஹஸ்ரத் மிர்ஸா வஸீம் சாஹிபுடன் சிறப்பான தொடர்பிருந்தது. இவரும் தனது கணவருடன் சேர்ந்து தர்வேஸான வாழ்க்கை வாழ்ந்தார். மிகவும் சிரமத்துடன் வாழ்ந்தாலும் மகிழ்ச்சியுடன் இருந்தார். மர்ஹூமா 1944 –ல் வஸிய்யத் செய்தார். ஆறு வருடங்கள் லஜ்னா இமாயில்லாஹ் பாரத் ஆக தொண்டு செய்யும் வாய்ப்பு பெற்றிருந்தார். மர்ஹூமாவுக்கு 4 மகன்கள் உள்ளனர். பெரிய மகன் ஹமீது தீன் ஷம்ஸ் மர்ஹூம் முபல்லிக் ஸில்ஸிலாவாக இருந்தார். 47 வயதில் இவரது வாழ்நாளிலேயே மரணித்து விட்டார்கள். இவரது இரண்டாவது மகன் அமீருத்தீன் சாஹிப் வாழ்வை அர்ப்பணித்தவராவார். மூன்றாவது மகன் ரஷீதுத்தீன் சாஹிப் சதர் உமூமியாக பணியாற்றுகிறார். இதுபோன்ற நஸீருத்தீன் சாஹிப் அங்கேயே பணியாற்றுகிறார். இவரது மருமகன் ஸையத் அப்துல் லத்தீஃப் சாஹிப் பாகல்பூரி மண்டலத்தின் அமீர் ஆவார். அப்துர் ரஃபி சாஹிப் உமூரே ஆமாவில் பணியாற்றி வருகிறார். மர்ஹூமா நோன்பு, தொழுகை, தஹஜ்ஜுத்தை பேணுபவர். தினமும் திருக்குர்ஆன் ஓதுபவர் காதியானில் காலா ரஷிதா என்ற பெயரில் பிரபல்யமானவர் மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிபுடைய மனைவியுடன் எல்லா இடத்திற்கும் செல்லக்கூடியவர். மிகவும் எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். கணவர் ஓய்வு

பெற்று அஞ்சுமனிலிருந்து Provident Fund உடைய ஒரு பெரிய தொகை கிடைத்த போது மனைவி இதுவரை நாம் ஒன்றும் செய்து தரவில்லை என்று நினைத்தார். அதனால் நகைகள் செய்து தந்தார். தங்க நகை. சில வாரத்திற்குப் பிறகு நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் புதிய தலைமையகங்களுக்கு நிதித்திட்டத்தை எடுத்து வைத்த போது தமது நகையைக் கொண்டு வந்து தந்து விட்டார்.

**மிர்ஸா வஸீம் அஹ்மத் சாஹிபின் இளைய மகள் கூறுகிறார்:**

நான் வாழ்நாள் முழுவதும் எதுவும் நகை அணிந்ததில்லை. தங்க நகை அணியாவிட்டால் என்ன? இதை வைத்துக் கொள்ளுங்கள். சந்தாவுக்காக வரும் பொருள்கள் கணவரின் பொறுப்பில் இருந்தன. அவர் இந்த நகையை பார்த்தார். இவை எனது மனைவியிடமிருந்து வந்துள்ளன என்று அறிந்து அவரிடம் சிறிது பணம் இருந்தது. அதை கொடுத்து விட்டு நிர்வாகத்திடம் இருந்து நகையைப் பெற்று மீண்டும் மனைவியிடம் தந்தார். சில வாரங்கள் கழித்து நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் மீண்டும் ஒரு நிதித்திட்டத்தை வைத்த போது மீண்டும் அதே நகையைக் கொண்டு வந்து தந்தார். இப்போது கணவரிடமும் வழியில்லாததால் இப்போது அதனை திருப்பித் தர முடியவில்லை. நான் வாழ்நாள் முழுவதும் தங்கம் அணிந்ததில்லை. இப்போது ஏன் அணிய வேண்டும் என்று தந்து விட்டார்.

இரண்டாவது ஜனாஸா நஸ்ருன் நிஸா சாஹிபா. இவர் முஹம்மத் கான் சாஹிப் மனைவி இந்தியாவைச் சேர்ந்தவர். மே 9ம் தேதி வஃபாத்தானார். 75 வயது. இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவரது கணவர் 1962 ல் ஜமாஅத்தை ஏற்கும் வாய்ப்பு பெற்றார். மிகவும் தூயவர். எதிர்ப்புக்கு இடையில் அஹ்மதிய்யத்தில் நிலை நின்றனர். தொழுகையைப் பேணுபவர். இனிய சுபாவம். ஏழைகளைப் பராமரிப்பவர். எளிய வாழ்க்கை வாழ்ந்தவர். 12க்கு மேற்பட்ட அனாதைகளைப் பராமரித்தார். தலைமையக பிரதிநிதிகளை மதிப்பவர். மூஸி ஆக இருந்தார். காதியான் பெஹஸ்தி மக்பராவில் நல்லடக்கம் செய்யப்பட்டார். அவருக்கு மூன்று மகன்கள். மூத்த மகன் நஸீம் அஹ்மத் கான். நாஸிர் உமூரே ஆமாவாக காதியானில் உள்ளார். இரண்டாவது மகள் சலீம் கான் சாஹிப். பிறகு வஸீம் கான் சாஹிப் வாழ்வை அர்ப்பணித்தவர். அல்லாஹ் இரு பெண்மணிகளின் தகுதியை உயர்த்துவானாக! மர்ஹூமீன்களின் சந்ததிகளுக்கும் அவர்களின் அடியொற்றி நடக்கும் வாய்ப்பு தருவானாக! எப்போதும் பற்றுடன் தொடர்பு கொண்டிருப்பார்களாக!

★ ★ ★ ★ ★

JUMUA KHUTBA
HADHRAT KHALIFATUL MASIH V
AT BAITUL FUTUH MOSQUE, LONDON
ON 11.05.2012

Translated by : Muallim M. NIZAMUDEEN
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456